*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(I), 2020*

# இனக்கலவரங்களும் அவற்றினால் மலையக மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளும்: மலையகக் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஸாதியா பௌஸர்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**மொழித்துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: saadhiyas@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*மலையக இலக்கியம் எனும் போது, அதனைப் பிரதேச ரீதியான ஓர் இலக்கியமாகவன்றி, அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரல் அல்லது இந்தியாவிலிருந்து இலங்கைப் பெருந்தோட்டங்களுக்குக் அழைத்து வரப்பட்ட பாட்டாளி மக்களின் குரல் என்றே கொள்ள வேண்டும். மலையக இலக்கியங்களின் வரலாற்றை ஆரம்பகாலம் (1825 – 1920), விழிப்புணர்ச்சிக் காலம் (1921 – 1950 களின் இறுதிவரை), எழுச்சிக்காலம் (1960 - இன்றுவரை) எனப் பகுத்து ஆராய முடியும். இம்மலையகக் கவிதைகளில் மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானதொரு பிரச்சினையாக இனக்கலவரங்கள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் பேசப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும். இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இனக்கலவரங்கள் ஏற்பட்டு, அதன் மூலம் மலையகத் தமிழ் மக்களும் பல்வேறு வகையான துன்பங்களை அனுபவித்தனர். இவை மலையகக் கவிதைகளிலும் முக்கிய இடம் பிடித்துள்ளன. ஆனால் அது பற்றிய ஆய்வுகள் வெளிவரவில்லை. அதனால் மலையகக் கசிதைகளில் இனக்கலவரங்ளும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் எந்தளவுக்கு பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்பதனை ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. இவ் ஆவ்வாய்வில் சமூகவியல், வரலாற்று அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கான மூல நூல்களான மலையகக் கவிதைத் தொகுதிகள் முதல் நிலை ஆதாரங்களாகவும், ஆய்வோடு தொடர்பாக வெளிவந்த ஆய்வு நூல்கள் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மலையகக் கவிதைகள் மலையக மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சித்திரித்தது போலவே மலையக மக்கள் இனக்கலவரங்களின்போது அனுபவித்த துன்பங்கள் பற்றியும் ஆழமாக சித்திரித்துள்ளன.*

**பிரதான சொற்கள்:** இனக்கலவரங்கள், மலையகக் கவிதை

## 1. அறிமுகம்

*இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இனக்கலவரங்கள் ஏற்பட்டு, அதன் மூலம் மலையகத் தமிழ் மக்களும் பல்வேறு வகையான துன்பங்களை அனுபவித்தனர். 1956ஆம் ஆண்டில் தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு எதிராக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதியான சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடாத்தப்பட்டன. இக்கால கட்டங்களில் இருந்தே வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் சிங்கள மக்களோடு இணைந்து வாழ்ந்த தமிழ்மக்கள் பல்வேறுபட்ட கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். பண்டா – செல்வா ஒப்பந்தம் முதலிய ஒப்பந்தங்களுக்கும் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் காணப்பட்டன.*

மேலும், ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை, நகர்ப்புற இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குத் தொழில் துறையில் புதிய வாய்ப்புக்களைக் கொடுத்தது, 1977ஆம் ஆண்டில் இம்மக்களுக்கு எதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டாலும், அவர்கள் பொருளாதார ரீதியாக தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களைக் கைவிடாது, தமது தொழில்களை விருத்தி செய்தனர். 1983ஆம் ஆண்டில் இலங்கையின் தென்மாகாணத்தின் சில முக்கிய பகுதிகளில், இவர்களது தொழில் நிலையங்கள் விருத்தியடைந்து காணப்பட்டன. இந்நிலைமையும் 1983ஆம் ஆண்டின் மிகக் கொடூரமான இனக்கலவரத்துக்கு ஒரு காரணமாக அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரவலான வன்செயல்களுக்குப் பின், 1981 ஆம் ஆண்டில் பலாங்கொடை, இரத்தினபுரி பிரதேசங்களிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு இருபதாயிரம் தமிழர்கள், அகதிகளாக்கப்பட்டனர் (சந்திரசேகரன், சோ., (1989), பக். 223 – 241, மூக்கையா, மா.செ., (1995), ப.210, De Silva, K.M., (1986), pp.323- 340, Herath, R.B., (2002), pp.56-77).

இவ்வாறு இடம்பெற்ற இனக்கலவரங்கள், அவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் என்பன பற்றி, மலையகக் கவிஞர்கள் பலர் தமது கவிதைகளில் எடுத்துக் காட்டியுள்ளனர். இக்கவிதைகளில் இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கான பின்புலங்கள், மக்கள் படுகொலை செய்யப்படல், அநியாயப்படுத்தப்படல், உடைமைகள் அழிக்கப்படல், பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படல், விதவையாக்கப்படல், மக்கள் அகதிகளாதல், இனக்கலவரத்தின் பின்னர் உருவான ஏமாற்றுப் பேர்வழிகள், கலவர காலங்களின் போது, அரசும் இராணுவமும் கலவரங்களை நிறுத்துவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும் தாமதித்தமை முதலிய விடயங்கள் பற்றி ஆழமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான கலவரங்களுக்கு முற்பட்ட காலங்களில், மலையகத்தில் மக்கள் இனவேறுபாடுகள் இன்றி மிகவும் அமைதியாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் இன ரீதியான வேறுபாடுகள் மக்கள் உள்ளங்களில் குடிகொண்ட பின்புதான், ஒற்றுமையாக வாழ்ந்த சமூகங்கள் தங்களுக்குள் பிளவுபட்டுக் கொண்டு, ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறான நிலைமைகளை ம. சண்முகநாதனின் ‘அந்த நாள்’ எனும் கவிதை சித்திரித்துக் காட்டுகின்றது:

“....... ம் .........

இடையில் வளர்ந்துவிட்ட
ஆறாத குரோதத்தால்
நான் தந்த ரொட்டியை நீ
நாய்க்குப் போட்டாய்
நீ தந்த மரவள்ளி
நஞ்சென்று அஞ்சினேன்
புகைந்து கிளர்ந்து
மூண்ட நெருப்பில்
எங்கள் இளமை
கருகிப் போனது .....
‘எனக்கும் உனக்கும்’
‘இனங்கள்’ தெரியாது
ஆனாலும் இன்று
என்னைக் கண்டு நீ
ஒதுங்கிப் போகிறாய்
உன்னைக் கண்டு நான்
பதுங்கிப் போகிறேன்! .....” (சண்முகநாதன், ம., (1995), ப. 13)

கவிஞர் தமது சிறு பராயத்தை நினைத்துப் பார்த்து, அன்றிருந்த நிம்மதி, சந்தோசம், நண்பர்கள், இன்று இனவாதம் என்ற ஒன்றின் மூலம் இல்லாது போனதை எண்ணி வேதனைப்படுவதாக இக்கவிதை அமைந்துள்ளது. மீண்டும் எப்போது இந்தப் பழைய உறவு வரும் என்ற ஏக்கம் இக்கவிதையின் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, அதில் வெற்றி பெறும்நிலை ஏற்படும் போதும் இனவாதிகளால் இனக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. குறிப்பாக இனவெறியர்களாக இருந்தவர்கள், பிரச்சினை வராதா என சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இதனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்த்தனர். தொழிலாளர் தமது உரிமைகளுக்காகப் போராடும் போதெல்லாம் ஏதோவொருவகையில் வன்முறைகள் தூண்டி விடப்பட்டன. இவ்வாறான நிலைமைகளை சிவ. இராஜேந்திரன் தமது 'மீட்சியை நோக்கி' எனும் கவிதையில் பின்வருமாறு சித்திரித்துக் காட்டியுள்ளார்:

''மீட்கப்பட வேண்டியவை
நிறைய இருப்பதால்
அதற்கான பயணமும்
நீண்டு கிடக்கிறது
இனவெறிக் கழுகுகளும்
காலை குறிபார்த்துக்
காத்துக் கிடக்கும்
கரு நகங்களும்
மேவிப் பாய்ந்து
மிதிக்க நினைக்கும்
மிருகங்களும்
ஏராளம் ஏராளம்
உலகம்
தலைகீழாகக் கிடக்கின்றது
ஆழக் கிடங்கில் மானுடம்
நெம்பு கோல்களை
உருவாக்க வேண்டியவர்கள்
வம்புப் பேய்களை
விதைத்துக் கொண்டிருக்கின்றனர்
குனிந்துழைக்கும் தோட்டத்
தொழிலாளர்கள்
குள்ள
நரிகளால் குதறப்பட்டுக்
குலைநடுங்கி நிற்கிறார்கள்
வெறி நாய்களை நோக்கி
விரல்களை நீட்டிய போதெல்லாம்
கொலைகளுக்காக
குதிரைகள்
தட்டப்பட்டன....''

(சிவசேகரம், சி., தம்பையா, இ., இராஜேந்திரன், சிவ., பன்னீர்ச் செல்வம், எஸ்., (1993),பக். 62 – 63)

நாடு சுதந்திரம் பெற்றதும் நாட்டு நிலைமைகளைச் சீர்படுத்துவதற்காக முயற்சிக்காமல் இனவாதத்தை வளர்த்தமையால் மக்கள் பாதிக்கப்பட்டனர். உடைமைகளும் சின்னாபின்னப்படுத்தப்பட்டன. மனிதனிடம் மனித நேயமின்மையே இதற்குக் காரணம். உரிமைகளுக்காக நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராடும் போது, இனவாதிகள் காடையர்களை ஏவி, அவற்றை முறியடித்தனர். இவ்வாறான நிலைமைகளும் இனக்கலவரங்கள் உருவாவதற்குக் காரணமாகின. இது பற்றி ஆர்.பி. ஹேரத் பின்வருமாறு கூறுகிறார்:

> ''இலங்கைச் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் சிறுபான்மைத் தமிழினத்திற்குப் போதியளவு வழங்கப்படவில்லை. பிரச்சினைகளுக்கு ஏட்டளவில் தீர்வு காணப்பட்டாலும் அவை, நடைமுறைப்படுத்தப்படாது, படிப்படியாகவும் திட்டமிடப்பட்ட வகையிலும் தமிழ் மக்களது உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்டு, அவர்களுக்கு இரண்டாம் நிலை அந்தஸ்து வழங்கப்பட்டது'' (Herath, R.B., (2002), p.76)

குறிப்பாக, மனிதனிடம் என்று மனித நேயம் இல்லாமல் போகின்றதோ அன்றுதான் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மனித நேயம் கொண்ட சமூகமொன்றில் அல்லது மனித நேயத்தை உயிர்நாடியாகக் கொண்ட ஒரு நாட்டில் இவ்வாறான பிரச்சினைகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படும். மனிதனிடமும் மனிதப் பண்புகள் மாறி, மிருகங்களுக்கு இருக்கக்கூடிய இரத்த வெறி ஏற்படும்போது தான், மனிதனையே மனிதன் கொன்று இன்பம் காண்கிறான். இன்று மனிதனிடம் மானுடம் மாண்டு போய்விட்டது. அது எப்போது மீண்டும்

வருமோ அப்போது தான், மனிதனோடு மனிதன் அன்பு செலுத்தி, உறவு பூண்டு, மகிழ்ச்சியாக வாழமுடியும். எஸ். பன்னீர்ச்செல்வத்தின் ''மானுடம் எங்கே'' எனும் கவிதையில் மனிதனிடம் மானுடம் இன்மையே பிரச்சினைகள் எழுவதற்குக் காரணம் எனும் கருத்து கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, மலையகத் தமிழர்கள் நீண்டகாலமாக இலங்கையில் வாழ்ந்தவர்கள். இலங்கை சுதந்திரம் பெற வேண்டும் என ஆவலோடு எதிர்பார்த்தவர்கள். இந்நாட்டுக்காக உழைத்தவர்கள். அவர்கள் இலங்கைக்கு வராதிருந்தால் ஆங்கிலேயர், இங்கிருந்த மக்களை பலாத்காரமாகவேனும் பயன்படுத்தி, அவர்களது காரியத்தைச் சாதித்திருப்பார்கள். ஆனால், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்து நாட்டை வளப்படுத்தினார்கள். அவர்கள் அடிமைகளாகவும், கூலிகளாகவும் வாழ்ந்தாலும், அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகள். அவர்களது உரிமைகளைப் பறித்து, அடிமைகளாக நடாத்த முற்பட்டமையே இக்கலவரங்கள் ஏற்படுவதற்கு அடித்தளமாக அமைந்தது. இவ்வாறான நிலைமைகள் சக்தி பால ஐயாவின் 'வாழ்த்துப்பா' எனும் கவிதையில் பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளன:

> ''எங்களை அடிமைக் கூலிபோல் வைக்கும்
> எண்ணமாய் ஆணவக்காரர்கள்
> தங்களின் இனத்தை தமிழுக்கு எதிராய்
> தூண்டியே படுகொலை புரிந்தார் ......'' (சக்தி பால ஐயா, (1998), ப. 80)

மலையக மக்கள் மலையகத்தை அழகுபடுத்தி உழைப்புக்கு ஏற்ற இடமாக மாற்றி, நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பினை வழங்கும்போது, அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து அவர்களை விரட்டும் நோக்கோடும், அவர்களது உழைப்பை பறிக்கும் வகையிலும் சதித்திட்டங்கள் கொண்டுவரப்பட்டமையும் இவ்வாறான கலவரங்கள் ஏற்படுவதற்கு வழிவகுத்தன.

## 2. மனிதப் படுகொலைகள்

மேற்கூறப்பட்ட பல்வேறு காரணங்களால் இனக்கலவரங்கள் ஏற்பட்டு, மக்கள் அநியாயப்படுத்தப்பட்டதோடு, படுகெலை செய்யப்பட்டனர். பாதைகளில் நாய்களும், பூனைகளும் செத்துக் கிடப்பதைப் போல், அங்குமிங்குமாக மனித உடல்கள் சிதறிக் கிடந்தன. பாதைகள் தோறும் பிணவாடை வீசியது. இவ்வாறான நிலைமைகளைப் பல கவிதைகளும் சித்திரித்துக் காட்டுகின்றன. சு. முரளிதரனின் 'மானுடப் புணர்வு', இக்பால் அலியின் 'திரைமறைவில் நகரபிதா', தர்மூவின் 'அமைதி பிறந்திட விளைவோம்', இராகலைப் பன்னீரின் 'இனிச் சகியோம்', சக்தி பால ஐயாவின் 'இன்றைய மனிதன்', தமிழோவியனின் 'படுகொலைக்குப் பாயிரம்', சிவ. இராஜேந்திரனின் 'பீடித்துண்டுக்கு ஓட்டுப் போடுவேனா', 'மாவலியை மாற்றிடாதீர்', இ.தம்பையாவின் 'அஞ்சலிகள்' முதலிய கவிதைகள் இவ்வகையில் அமைந்தவை.

புத்த பெருமான் மக்களுக்கு அறநெறிகளையே போதித்தார். மனிதன் மனிதனாகவும் புனிதனாகவும் வாழ வழிகாட்டினார். சிறந்ததொரு வாழ்க்கை வாழ்வதற்கான மனித நேயங்களைக் கற்றுக் கொடுத்தார். ஆனால் மக்கள் அவற்றை மறந்து செயற்பட ஆரம்பித்ததால் மனிதன் பிணம் செய்யும் தேசமாக இத்தேசத்தை மாற்ற முயன்றான். தன்னலத்தை தனக்குள் வளர்த்துக் கொண்ட மக்கள், மனம் கூசாமல் படுகொலைகள் புரிந்தனர். இன பேதங்களை மறந்து தமக்குள் திருமண உறவுகளைக் கூட, வைத்துக் கொள்ளலாம் என ஆசைப்பட்டு, மணவறைக் கோலம் கண்டு மகிழ்ந்திடுவோம் என்று கனவு கண்டு மகிழ்ந்திருந்த கன்னியரையெல்லாம், பிணவறைக்கே அனுப்பி விட்டார்கள். பால்மணம் கூட, மாறிடாத சிறுகுழந்தைகளையும் வாளினால் வெட்டிக் கொன்றார்கள். மக்களைக் கதறக் கதறச் சித்திரவதை செய்தார்கள். இந்நிலைமைகள் குறிஞ்சித் தென்னவனின் 'புத்தனுக்கோர் விண்ணப்பம்' எனும் கவிதையில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இடம்பெற்ற கலவரங்களின் போது மக்கள் உயிரோடு புதைக்கப்பட்டனர். சிலர் கொதிக்கும் தார் பீப்பாக்களில் போடப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மற்றும் சிலரை டயர்களோடு சேர்த்து உயிரோடு எரித்தனர். வேறு சிலரை வாளால் அரிந்து கொன்றனர். சிலர் கைகால்கள் கட்டப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டனர். எங்கு பார்த்தாலும் படுகொலைகளாகவே இருந்தன. மக்கள் பீதியால் அஞ்சி நடுங்கினர். உண்ண உணவின்றி பரிதவித்தனர். படுகொலைகளுக்கு எல்லையே இல்லாது போயின.

மக்கள் வடிக்கும் கண்ணீரால் மலைகள் மூடிவிடக்கூடாது என்பதற்காக மலையக மக்களின் கண்ணீரை அள்ளிச் செல்கின்றது மகாவலி கங்கை. 'குடிநீர்', 'குளிப்பு', 'கோயில் திருவிழா', 'குடிவிடுதல்' என மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக மகாவலி ஆறு காணப்படுகின்றது. ஆனால், கலவர காலங்களில் இவ் ஆறானது, பிணங்களைச் சுமந்து செல்லும் ஆறாக மாறியது. இந்நிலைக்கு மகாவலியை மாற்றிடாதீர் எனக் கேட்பதாக "மாவலியை மாற்றிடாதீர்" எனும் கவிதையில் அமைந்துள்ளது. உயிர்ப் படுகொலைகள் பற்றி கவிஞர் இக்கவிதையில் தத்ரூபமாக சித்திரித்துக் காட்டியுள்ளமை நோக்கத்தக்கது:

"..... மீண்டும் மாவலியை
பிணம் சுமக்க விட்டுவிடாதீர்
உடலில்லா தலைகளையும்
தலையில்லா உடல்களையும்
எரிந்த, எரிக்கின்ற, எரியும்
உடல்களையும்
கைகளையும், கால்களையும்
சுமந்து செல்லும் பிணந்திண்ணியாக
மாவலியை மாற்றிடாதீர்!......."
(சிவசேகரம், சி., தம்பையா, இ., இராஜேந்திரன், சிவ.,பன்னீர்ச்செல்வம், எஸ்., (1993),ப. 65)

குறைவின்றி விளையும் நெல் வயல்களும், தேயிலைத் தோட்டங்களும், முத்து வைரங்களும், அழகிய நதிகளும், கனிதரும் மரங்களும், கடல் வளங்களும் எனப் பல்வேறு செல்வங்களையும் கடவுள் இந்நாட்டிற்கு ஈந்தான். அவற்றை மக்கள் சிறந்த முறையில் அனுபவித்து சிறந்ததொரு வாழ்க்கை வாழவில்லை. சுதந்திரம் பெற்று அதனைக் கொண்டாடுவதற்காக விடப்பட்ட வெள்ளைப் புறாக்கள் பறந்திடும் முன்பே சுட்டு வீழ்த்தப்பட்டன. அனைத்தும் இனவெறி என்னும் நெருப்பில் தீய்ந்தன. மதவழிபாட்டுத் தலங்களில் மக்கள் கூடியதால் அவையும் இரத்தக்கறை படிந்தன. தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை இழந்தனர். அண்ணன், தம்பியை இழந்தவர்கள் ஏராளம். அதிகமானவர்கள், கால், கைகளை இழந்து, முடமாகினர். இவற்றால் மக்கள் விரக்தியடைந்தனர். செய்வதறியாது திகைத்தனர். இந்நிலைமைகளைச் சித்திரிப்பதாகவே தர்மூவின் 'அமைதி பிறந்திட விளைவோம்' எனும் கவிதை அமைந்துள்ளது. இந்நிகழ்வுகள் சங்ககால இறுதிப் பகுதியில் போரினால் ஏற்பட்ட விளைவுகளை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இனக்கலவரங்கள் ஏற்பட்டபோது மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள் கொல்லப்பட்டனர். இதனை இக்பால் அலியின் "திரைமறைவில் நகர பிதா" எனும் கவிதை பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகின்றது:

"...... 77, 83 இல்
அக்கினி பூத்த வேளை
கொடிய அரக்கர்களின்
மிதியடிக் கட்டைகளுக்கு
ஒத்துப்பட்ட
கருகிய மனிதப் பிண்டங்களை
தானும்

அகதியாய் இருந்து – அழுக்கை
அகற்றவந்த பன்னீர் புஷ்பங்கள்தான்
இங்கே மறைந்து கிடக்குது.
72, 89 இல்
வறுமையின் நிழலில் வாடும்
தென்றலுக்காய்
சீறிப்பாய்ந்த சிங்கங்களின்
கண்கள் கட்டப்பட்டு
கைகள் கட்டப்பட்டு
இரத்தம் தோய்ந்த பிணங்கள்
ஊனமுற்று நாற்றமெடுத்தன
குருதி படிந்த தெருக்களில்…." (இக்பால் அலி, (1996), ப.47)

கலவர காலங்களில் அநியாயத்திற்கு எதிராகப் போராடியவர்கள், அநியாயங்களைத் தட்டிக் கேட்டவர்கள், குற்றவாளிகளாய் கைது செய்யப்பட்டு முகாம்களிலும் காடுகளிலும் கைகள், கண்கள் கட்டப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டதனையே இக்கவிதை சித்திரிக்கின்றது.

### 3. உடைமைகள் சேதமாக்கப்படல்

உயிரிழப்புகளைப் போன்றே மலையகத் தமிழ் மக்களின் உடைமைகளும் இக்கலவர காலங்களில் அழிக்கப்பட்டன. அவர்களது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. தம்மிடமிருந்த அனைத்தையும் இழந்து மக்கள் நடுத்தெருவுக்கு வந்தனர். இவ்வாறான சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பனவாகவே குறிஞ்சித் தென்னவனின் "புத்தனுக்கோர் விண்ணப்பம்", தமிழோவியனின் 'படுகொலைக்குப் பாயிரம்', தர்மூவின் 'அமைதி பிறந்திட விளைவோம்', சு. முரளிதரனின் 'சாம்பல் மேட்டு சமாதானங்கள்', சிவ. இராஜேந்திரனின் 'விடிவை நோக்கிய வேலக்காடு' முதலிய கவிதைகள் அமைந்துள்ளன.

மலையக மக்கள் கடுமையாக உழைத்து, கொஞ்சம் கொஞ்சமாக தேனீக்களைப் போல் சேர்த்த செல்வங்கள் அனைத்தையும் இனவாதிகள் சூறையாடினர். சங்க கால அரசர்கள், எதிரிகளின் நாடுகளைக் கைப்பற்றி அங்குள்ள செல்வங்கள் அனைத்தையும் கொள்ளையடித்தனர். அதேவேளை மக்கள் கதறி அழுது கொண்டு ஓட, எதிரிகளது நாடுகளை எரியூட்டினர். இவ்வாறான நிகழ்வுகளைப் புறநானூற்றுப் பாடல்கள் சித்திரிக்கின்றன. இதே மாதிரியான, அல்லது இதனைவிட மோசமான நிகழ்வுகளே மலையகத்திலும் இனக்கலவரங்களின் போது இடம்பெற்றன. மலையக மக்கள் கதறி அழுது புலம்பிக் கொண்டு ஓட, இனவெறியர்கள் அவர்களைக் கொன்றதோடு நின்றுவிடாது அவர்களது வீடுகளை எரித்து மகிழ்ந்தனர். இதற்குப் பின்வரும் கவிதை சான்று பகர்கின்றது:

"....... தேனீயாய்ப் பாடுபட்டு
சேர்த்துள்ள செல்வமெல்லாம்
கேள்விகள் இன்றி கொள்ளை
கொண்டனர் கொடுமையாளர்!..
அன்று இந்த ஈழ நாட்டினில்
அனுமன் வைத்த தீ பரந்ததுவே!
இன்று மலையக மக்களின் வீடுகள்
எரிந்து மகிழ்ந்தவர் உந்தனடியவர்
கன்றும் தாயும் கதறி அழுதிட
காண்பவர் நெஞ்சம் பதறித் துடித்திட
கொன்று தீர்த்து களிவெறி கொண்டனர்!..." (குறிஞ்சித் தென்னவன்,(1987),ப.20)

இம்மக்களின் நகைக் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஏனைய கடைகளிலும் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்து விட்டுக் கடைகள் அனைத்தையும் எரியூட்டினர். அச்சகங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அதனால் பெறுமதிவாய்ந்த நூல்கள், எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அழிந்தன. குறிப்பாக தமிழோவியன், சக்தி பால ஐயா ஆகியோரது ஆக்கங்கள், அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டதால் அழிந்து போயின. மக்களிடம் காணப்பட்ட பெறுமதியான பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு மக்களையும் வைத்து அவர்கள் இருந்த இடங்களிலே தீ வைத்தனர். அதேவேளை கோயில்களிலும் கொள்ளையடித்தனர். 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தில் இந்நிகழ்வுகள் மிகவும் கொடூரமாக நடைபெற்றன. இதற்குத் தமிழோவியனின் 'படுகொலைக்குப் பாயிரம்', சக்தி பால ஐயாவின் 'அருட் சோதி வள்ளலாருக்கு விண்ணப்பம்' முதலிய கவிதைகள் சான்றாக விளங்குகின்றன.

### 4. அகதி நிலை

இவ்வாறான நிகழ்வுகளால் குறிப்பாக மக்கள் அநியாயப்படுத்தப்பட்டும், அவர்களது உடமைகள் கொள்ளையிடப்பட்டும், தீயிடப்பட்டும் கொடுமை புரிந்ததால், உண்ண உணவின்றியும், இருப்பதற்கு இருப்பிடமின்றியும் பொது இடங்களில், குறிப்பாக கோயில்களில் மக்கள் சென்று தஞ்சம் புகுந்தனர். அவ்வாறான இடங்களில் வாழ்வதும் தமக்குப் பாதுகாப்பற்றதாக விளங்குவதை எண்ணி வடக்கு, கிழக்கு மாகாணங்களை நோக்கி மக்கள் அகதிகளாகச் சென்றனர். சிலர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றனர். இவ்வாறு இவர்கள் அடைந்த துன்பங்களுக்கு எல்லையே இல்லாது போய் விட்டது. பெனியின் 'அகதி ஆகமம்' எனும் கவிதையில் இவ்வாறான விடயங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:

> "....... ஆண்டுக் கொருமுறை
> அலைக் கழிக்கப் பட்டதால்
> மன்னாரிலும் வவுனியாவிலும்
> மறுவாழ்வு தேடினோம்
> அங்கே சொந்த வீடுகட்டி
> சுகமாக வாழ்கையில்
> எண்பத்து மூன்றில்
> இராணுவத் தாக்குதல்
> மறுபடியும்
> எங்கள் முன்னோர்கள்
> வந்த வழி வழியே
> அகதிகள் பட்டத்துடன்
> தமிழ் நாட்டில்
> அடைக்கலம் தேடினோம்..." (பெனி,(1999),பக்.96–97)

இவ்வாறு இவர்களது அவல வாழ்வு சித்திரிக்கப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

### 5. பெண்கள் மீதான வல்லுறவுகள்

கலவர காலங்களில் இளம் பெண்களும், சிறுமிகளும், தாய்மாரும் காம வெறிபிடித்த காடையர்களால் மிக மோசமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். வீடுகளில் கணவன்மாரைக் கட்டி வைத்து விட்டு, அவர்கள் முன்னிலையிலேயே அவர்களது மனைவிமார் துகிலுரியப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். காதலன் முன்னிலையிலே இனவெறியர்களால் காதலி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். குழந்தைகளின் முன்னே, தாய்மார் அழுது புலம்ப பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இவற்றைத் தாங்க முடியாத பெண்கள் சிலர், தற்கொலை செய்து கெண்டனர். சில பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவர்களாலேயே கொல்லப்பட்டனர். அவர்களது உறுப்புக்கள் காம வெறியர்களால் கடித்துக் குதறப்பட்டன. இவ்வாறான அநியாயங்களைச் சித்திரிப்பதாகச்

குறிஞ்சித் தென்னவனின் 'புத்தனுக்கோர் விண்ணப்பம்', தர்மூவின் 'அமைதி பிறந்திட விளைவோம்', எஸ். பன்னீர்ச் செல்வத்தின் 'அஞ்சலைக்கு அஞ்சலி', 'ஆண்டவனுக்கு மனு' முதலிய கவிதைகள் விளங்குகின்றன.

காடைத் தனத்தின் உச்சகட்டமான 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தின் போது, பெண்களின் உடல்கள் காடையர்களது பலாத்காரப் பிடியில் பலமிழந்து போனது. இந்நிலையில் இப்பெண்கள் கண்ணகியைப் போல் தெய்வமாக இருந்திருந்தால் தமது மார்பை அறுத்தெறிந்து, அப்பிரதேசத்தையே எரித்திருப்பார்கள். பெண்களை யாரும் காப்பாற்ற முடியாதவண்ணம் உயிரோடு கொளுத்தினார்கள். காமவெறி கொண்ட காடையர்கள் ஒன்றுகூடி, மகனின் முன்னிலையிலேயே தாயின் கற்பை அழித்தும், அதனைத் தடுக்க முடியாத துர்ப்பாக்கியசாலியாக மகன் இருக்க வேண்டி ஏற்பட்டது. அம்மாவும் அப்பாவும் தீயின் வெம்மையால் அழிந்து போக, தங்கையானவள் இத்தீயவர்களின் காம வெப்பத்தில் அழிந்து போனாள். நாடெங்கும் இவ்வாறு அப்பாவிப் பெண்கள் அவமானப்பட்டு, அழுது கண்ணீர் வடித்தனர். இவ்வாறான கொடூரமான நிகழ்வுகளை எஸ். பன்னீர்ச் செல்வத்தின் 'அஞ்சலைக்கு அஞ்சலி' எனும் கவிதை சித்திரித்துக் காட்டுகின்றது:

"...... காடைத் தனத்தின்
கடைசி யெல்லை
எண்பத்தி மூன்றிலே
எரியுண்ட போது
என் உடலும்
பலாத்காரப் பிடியிலே
பலமிழந்து போனது .....
தெய்வமாயிருந்திருந்தால்
மார்பை அறுத்தெறிந்து
மானிலத்தை எரித்திருப்பாய்
மாத்தளை மாறியே
தீயின் வெம்மைக்கு
தீக் கிரையானாளே
தன்னையே
காப்பாற்ற
தடுமாறிப் போனாளே
என்
கைகளைக் கட்டிவிட்டு
உன்
கற்பைப் பிடுங்கியதால்
வெறித்து எழுந்தபின்னே
வீரியம் இழந்து
போனேனே!
சொறி பிடித்த
நாய்களெல்லாம்
வெறிபிடித்து உன்னுடலை
ஊளையிட்டு
நின்றபோது
மதிகெட்ட மைந்தனாக
மண்ணிலே யிருந்தேனே!
தங்கையே .........
தீயின் வெம்மையில்
அம்மாவும் அப்பாவும்
அவிந்து போனாலும் - நீ
காம வெப்பத்தில்
அல்லவா – கரைந்து
போனாய்! ........
நாடு எங்கும்
உன்னைப் போலே
ஆயிரம் சோதரிகள்
அவமானப்பட்டு
அழுது வடித்த கண்ணீர்
கங்கையாய்ப் பெருக்கெடுக்கும்
..........."

(சிவசேகரம், சி., தம்பையா, இ., இராஜேந்திரன், சிவ., பன்னீர்ச் செல்வம், எஸ்., (1993), பக். 105–107)

அத்தோடு, இளைஞர்களில் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதால் இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். விதவையாக்கப்பட்ட இளம் பெண்கள், தம் பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்தும், கணவனை இழந்த துயரிலும் செய்வதறியாது வேதனைப்பட்டனர். கன்னிப் பெண்களும் தம் காதலர்களின் இறப்பால் வேதனைப்பட்டனர். தாய்மார் தம் புதல்வர்கள் கொல்லப்பட்டதால் பிரிவாற்றாமையினால் வருந்தினர். இவ்வாறான நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தும் வகையில் தர்முவின் 'அமைதி பிறந்திட விளைவோம்' எனும் கவிதை அமைந்திருப்பதைக் காணலாம். அதாவது:

"....... அண்ணன் தம்பியை இழந்தவர் கோடி
இன்னும் இவர்களை துணையாய் மணந்த
பிஞ்சு விதவைகள் பிள்ளைகளோடு!
கன்னியரெல்லாம் காதல் துறந்தார்
காதல் இளைஞர்கள் களத்தில் வீழ்ந்தார் ......." (தர்மு, (2000), மலையரசி, ப. 82)

எனக்கூறி, இப்பெண்களின் சாபம் எப்போது தீருமோ என்று வினா எழுப்புகின்றார் கவிஞர். இவ்வாறான கலவரங்களின் போது இம்மக்கள் வயது வேறுபாடின்றி அநியாயப்படுத்தப்பட்டதோடு, படுகொலை செய்யப்பட்டனர். அதேவேளை உடைமைகளும் சேதமாக்கப்பட்டன என்பது மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்தும் தெளிவாகின்றது.

### 6. அரசாங்கமும் காவல் துறையினரும்

இவ்வாறான அராஜகங்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு கால கட்டத்திலும் இடம்பெற்ற போது, இவற்றைத் தடுப்பதற்கு அரசாங்கமோ காவல் துறையினரோ உடனடி நடவடிக்கைகளை எடுக்கவில்லை. காவல் துறையினரின் முன்னிலையிலேயே படுகொலைகளும், அநியாயங்களும் இடம்பெற்ற போதும் அவற்றை அவர்கள் அலட்சியம் செய்ததோடு, கண்டும் காணாதது போல் நடந்து கொண்டனர். இவர்கள் இவ்வாறான சூழ்நிலையில் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கியிருந்தால், இந்தளவுக்கு அழிவுகள் ஏற்பட்டிருக்காது. இதனைப் பல வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்கள் உறுதி செய்கின்றன:

> "இவ்வாறு தமிழர்களுக்கெதிராக வன்செயல்கள் நிகழ்ந்தபோதெல்லாம் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, கலவரங்களை அடக்கியதாகக் கூறமுடியாது. அரசாங்க நடவடிக்கைகள் தாமதித்தே ஒழுங்கை நிலைநாட்டின. நாடெங்கும் கலவரங்கள் நிகழும்போது அவற்றை அடக்குவதற்கான படைபலம் அரசாங்கத்திடம் இல்லாமலிருந்தது உண்மை தான். மேலும் அரசாங்கத்தின் படையில் பெரும்பாலானவர்கள் சிங்கள இனத்தவர்களாக இருந்தனர். அவர்களைக் கொண்டு கலவரங்களில் ஈடுபட்ட சிங்களவர்களை அடக்க முற்படுவது நடைமுறையில் துரித வெற்றியைத் தரவில்லை. அரசாங்கமும் சில சந்தர்ப்பங்களில் சற்றுத் தாமதித்தே செயலில் இறங்கியது என்ற குற்றச்சாட்டும் காணப்பட்டது." (சந்திரசேகரன், சோ., (1989),ப.239)

குறிஞ்சித் தென்னவன் 'புத்தனுக்கோர் விண்ணப்பம்' எனும் கவிதையில் இவ்வாறான நிலைமையைப் பின்வருமாறு சித்திரித்துக் காட்டியுள்ளார்:

"....ஊர்க்காவல் படையிருந்தும்
ஓலமிட் டழுதோர் குரல்
கேட்காத செவிடர் ஆனார்!
கெடுதிசெய் எண்ணத்தாலே
தீக்கோலைப் பிடித்த கைக்குத்
துணையாகிப் போனா ரந்தோ!
பார்க்குள்ளே எமதூர் காவற்
படைப் பெருமைதான் என்னே!
சட்டங்கள் இருந்தும், நீதிச்
சபைகள் தாம் இருந்து மென்ன?
பட்டங்கள் பெற்றோர் உயர்
பதவியில் இருந்து மென்ன?
துட்டரின் ஆட்சியன்றோ
தொடர்ந்தது நாட்டி லன்று!
கொட்டிய எங்கள் செந்நீர்க்
குருதிதான் ஓடக்
கண்டோம்!." (குறிஞ்சித் தென்னவன், (1987), பக்.20-21)

இனவாதிகளின் தாக்குதலுக்குப் படையினரும் துணைபோயுள்ளனர் என்பதும், சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான கலவர சூழலில் படையினர் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பதும், அரசும் அதன் சட்டங்களும் இம்மக்களுக்குத் தக்க சமயத்தில் உதவுவதற்குத் தவறிவிட்டன என்பதும் மேற்கூறப்பட்ட கவிதையின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறான அநீதிகள் இன்னும் இந்நாட்டை விட்டு முழுமையாக நீங்கிவிடவில்லை என்றுதான் கூறவேண்டும்.

## 7. ஊழல்கள்

இவ்வாறான கலவரங்கள் நடைபெற்று முடிந்தபின் அரசும், ஏனைய நிறுவனங்களும், வெளிநாடுகளும் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக முன்வந்தன. அதேவேளை சில நண்பர்களும், உறவினர்களும் உதவ முன்வந்தனர். ஆனால் சிலர் ஏற்கனவே இருந்த உறவுகளைக் கூட அறுத்துக் கொண்டனர். மக்களுக்கு இழந்த சொத்துக்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்கும், வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் என சில அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளிடமிருந்து பணத்தைப் பெற்று, தாம் அவற்றை அனுபவித்து மகிழ்ந்தனர். சொத்துக்களை இழந்தவர்களுக்கு எதுவித உதவியும் கிடைக்கவில்லை. மாறாக, இவர்களது உயிருக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவித்தோர் பணம், வீடு முதலியவற்றைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாறான நடப்புகளைச் சக்தி பால ஐயாவின் ''மரணம் வென்றேன்'' எனும் கவிதை சித்திரித்துக் காட்டுகின்றது.

## 8. முடிவுரை

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பினை மலையக மக்கள் செய்து வருகின்றனர். மழை, வெயில் என்று பாராது கடுமையாக உழைப்பவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். எனினும், அவர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த காலம் முதல் இன்று வரை பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தொழில், சொந்த வீடற்றநிலை, வறுமை, காலநிலை, காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள் முதலியவற்றால் பல்வேறு வகையிலும் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர். மலையக இலக்கியம் மலையக மக்களின் பிரச்சினைகளை ஆழமாக சித்திரிக்கின்றது.

மலையகத் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு வடுவாக விளங்குகின்றது. இவ்வாறு காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் அவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் என்பன பற்றி தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை', சி.வி. வேலுப்பிள்ளையின் 'இனிப்பட மாட்டேன்', மாத்தளை சோமுவின் 'எல்லை தாண்டா அகதிகள்' முதலிய மலையக நாவல்களிலும் மிகவும் ஆழமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் மலையகக் கவிஞர்கள் பலரும் மலையகம் சாராத கவிஞர்கள் பலரும் தாம் இனக்கலவர காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை படிம உத்தியைக் கையாண்டு கவிதைகளாகப் பதிவுசெய்துள்ளனர். அவற்றில் மனிதப்படுகொலைகள், உடைமைகள் அழிக்கப்படல், பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படல், அகதிவாழ்வு முதலிய இன்னோரன்ன விடயங்களை சித்திரித்ததோடு, இவ்வாறான காலகட்டங்களில் அரசாங்கமும் கவல்துறையினரும் உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கத்தவறியமை பற்றியும் கவிதைகளில் சித்திரிக்கத் தவறவில்லை. அதேவேளை, ஒரு அனர்த்தம் அல்லது அழிவிற்குப்பின் நிவாரணம் வழங்குவதற்காக பல நிர்வனங்கள் முன்வருவதும் அதற்குள்ளும் ஊழல்கள் இடம்பெறுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்து. இந்நிலைமைகளையும் இக்கவிதைகள் சித்திரிக்கத் தவறவில்லை.

மலையக இலக்கியங்களைப் பொறுத்தவரை மலையக மக்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சிறந்த சான்றாகவே விளங்குகின்றது. குறிப்பாக மலையக மக்களின் இன்ப துன்பங்கள் அனைத்தையும் பிரதிபலிப்பதை அவதானிக்க முடியும்.

**உசாத்துணைகள்**

அருணாசலம், க. (1994அ). *இலங்கையின் மலையகத் தமிழர்*. தமிழ் மன்றம், கல்ஹின்னை.

அருணாசலம், க. (1994ஆ). *மலையகத் தமிழ் இலக்கியம்*. தமிழ் மன்றம், கல்ஹின்னை.

இக்பால் அலி. (2001). *புள்ளிகளில் சில புள்ளிகள்*. ஞானம் பதிப்பகம், கண்டி.

குறிஞ்சித் தென்னவன், (1987). *குறிஞ்சித் தென்னவன் கவிதைகள்*. மலையக வெளியீட்டகம், கண்டி.

சக்தி பால ஐயா. (1998). *சக்தி பால ஐயா கவிதைகள்*. சென்னை.

சிவசேகரம், சி., இராஜேந்திரன், சிவ., தம்பையா, இ. (1993). *குன்றத்துக் குமுறல், தேசிய கலை இலக்கியப் பேரவை*. சாவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.

தமிழோவியன். (2000). *தமிழோவியன் கவிதைகள்*. கொழும்பு.

திருநாவுக்கரசு, வ. (2005). *பேரினவாதத்தின் அழிவே - இலங்கையின் விடிவு*. பக். 01 – 02.

பன்னீர்ச் செல்வம், மை. (2002). *ஆறு ஐந்தாய் மாறும்*. பாரதி வெளியீட்டகம்.

பூண்டுலோயா தர்மு,(2000). *மலையரசி*. அட்டன்.

பெனி, (1996). *போர்க்களப் பூபாளங்கள்*. கொழும்பு.

பெனி, (1999). *நெருப்பு ஊர்வலங்கள்*. மட்டக்களப்பு.

முரளிதரன், சு. (1988). *தியாக யந்திரங்கள்*. மலையக வெளியீட்டகம், கண்டி.

முரளிதரன், சு. (2001). *தீவக்கத்து ஊமைகள்*. மலையக வெளியீட்டகம், கண்டி.

மூக்கையா, மா.செ. (1995). *இன்றைய மலையகம்*.

வெள்ளைச்சாமி, க. (குறிஞ்சி நாடன்). (1999). *குறிஞ்சி நாடன் கவிதைகள்*. ஞானம் பதிப்பகம், கண்டி.

வேலுப்பிள்ளை, சி.வி. (1969). *தேயிலைத் தோட்டத்திலே*. கண்டி.

De Silva, K.M. (1986). *Managing Ethnic Tensions in Multi - Ethnic Societies, Sri Lanka 1880 - 1985*. University Press America, pp.323-340

Dharmapriya Wesumperuma. (1986). *Indian Immigrant Plantation Workers in Sri Lanka: A Historical Perspective: 1880-1910*. Colombo.

Herath, R.B., (2002). *Sri Lankan Ethnic Crisis towards a Resolution*. Trafford Publishing, Victoria, Canada. pp. 56-77.